## தேர்தல் திட்டத்தின் சுருக்கம்

## இடதுசாரி அமைப்பு (DIE LINKE.LISTE)ஒபகவுசன்

அன்பான ஒபகவுசன் வாழ் மக்களே,

13 செப்ரம்பர் 2020 அன்று ஒபகவுசன் நகரசபைக்கான நகரபிதா மற்றும் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் தேர்தல் நடைபெறுகிறது. அடுத்த சில ஆண்டுகளில் எங்கள் நகரம் எவ்வாறு வளர்ச்சியடைய வேண்டும் என்பதை தீர்மானிக்கும் வாய்ப்பு ஒபகவுசன் நகரமக்களாகிய எங்களுக்கு கிடைத்துள்ளது. இடதுசாரி அமைப்பான(DIE LINKE.LISTE)நாங்களும் ஒபகவுசன் நகரில் வசிக்கும் 210,000 மக்களில் ஒருவராக இருக்கிறோம். இந்த நகரத்தில் வாழும் மக்கள் வெவ்வேறு இனம், சமூகப்பின்னனிகள்,வெவ்வேறு தேவைகள் மற்றும் வாழ்க்கை முறைகளை கொண்டவர்களாக இருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரை ,நாம் அனைவரும் வாழும்,வேலைசெய்யும்,மற்றும் எங்கள் ஓய்வுநேரத்தை செலவழிக்கும் அத்தோடு சமூக உறவுகளை பராமரிக்கும் இடமாகவும் ஒபகவுசன் நகரம் உள்ளது. நாங்கள் அனைவரும் எங்கள் பன்முகத்தன்மை (Unterschiedlichkeit)மற்றும் சமூகப்பின்னனிகளை பொருட்படுத்தாமல் இருந்தால் சுயநிர்ணயமான ஒரு நல்ல வாழ்க்கையை வாழமுடியும்.

பசுமையான இடங்களை அழித்து சமூகத்தை சீரழிக்கும் ஒரு புதிய தாராளமய அரசியல் கொள்கைகளுடன் நகரத்தை விற்பவர்களிக்கு எதிரான ஒரு எதிர்ப்பு சக்தியாக இடதுசாரி அமைப்பு செயற்படுகிறது.

DIE LINKE. LISTE என்பது ஒபகவுசனிலுள்ள இடதுசாரிகள் சங்கம். இச்சங்கம் இடதுசாரிக்கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் கட்சியல்லாத சுயாதீன இடதுசாரியினரையும் கொண்டுள்ளது.

மக்களுக்கு அரசியல் நடத்துவதை விட மக்களுடன் இணைந்தே திட்டங்களை உருவாக்க விரும்புகிறோம். எனவே ஒரு ஒற்றுமையான சமூகத்தை உலகிற்கு காட்டுவதற்காக அனைத்து குழுக்கள் மற்றும் அமைப்புகளின் ஒத்துழைப்பை எதிர்பார்த்து நிற்கின்றோம்.

அடுத்த ஆட்சிக்காலத்தில் ஒரு பலமான இடதுசாரி செய்யவேண்டியது அதிகம் உள்ளது. எங்கள் உள்ளூர் தேர்தல் திட்டம் தனி ஒரு தேர்தல் திட்டமாக மட்டுமல்லாது இடதுசாரி அமைப்பின் (DIE LINKE.LISTE) நாடாளுமன்றக்குழுவின் வேலைத்திட்டமாகவும் உள்ளது. இது ஒபகவுசன் நகரில் வாழும் அனைத்து மக்களின் வாழ்க்கைத்தரத்தின் முன்னேற்றத்தையும் சமூகப்பங்களிப்பையும்




அடிப்படையாகக்கொண்டது. இது நவீனமானதாக இருந்தாலும் யதாதர்த்தமானது. ஒரு சமூக,சுற்றுச்சூழல் மற்றும் ஜனநாயக நகரத்தை விரும்பும் அனைத்து ஒபகவுசன் மக்களையும் இலக்காக கொண்டுள்ளது. இதன்மூலம் எங்களது சுருக்கமான தேர்தல் திட்டத்தை விமர்சன ரீதியாக ஆராய்வதற்கும், எங்களுடன் சேர்ந்து ஒபகவுசன் நகரத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பதற்கும் அனைவரையும் நாங்கள் அன்புடன் அழைக்கிறோம்.

400ற்கும் மேற்பட்ட உள்ளூர் அரசியல் கோரிக்கைகள் மற்றும் குறிக்கோள்களைக் கொண்ட எங்கள் விரிவான தேர்தல் திட்டத்தை நீங்கள் வாசிக்க விரும்பினால், அதை எமது இடதுசாரிகட்சியின் காரியாலயத்திலுள்ள அறிவிப்புப்பலகையிலோ அல்லது கீழேயுள்ள வலைத்தளத்திலோ பார்வையிடலாம்.



1. வருங்கால நகரத்தின் ஜனநாயகமும் வளர்ச்சியும்

ஒரு நகரம் அதில் வாழும் மற்றும் வேலை செய்யும் மக்களுக்கு சொந்தமானதாக இருக்க வேண்டும். நகரத்திலும் அதன் சுற்றுப்புறத்திலும் நடக்கும் அரசியல் நிகழ்வுகளை அந்த நகரத்தில் வாழும் மக்களே தீர்மானிக்க வேண்டும்.அதற்கு நிர்வாகங்களினுடைய வெளிப்படைத்தன்மையும் மக்களுடைய ஜனநாயக பங்களிப்பும் முக்கியமானது.  மக்கள் எதுவித தடையும் இன்றி பயன்படுத்தக்கூடிய வகையில்பொது இடங்களை விரிவுபடுத்தப்படுவது முக்கியமானதொன்றாகும். இதில்  விளையாட்டு, கலாச்சாரம் மற்றும் இளையோருக்கான இடங்கள் அவசியம். இதில் இளையோரும் கலாச்சார மையங்களும் சுயமாக இயங்க அனுமதிக்கப்படுவதோடு உடற்பயிற்சிக்குரிய நிலையங்கள் (விளையாட்டுதிடல்,நீச்சல்தடாகங்கள்)அமைப்பதும் அவசியம்.

2.சமூக சமத்துவம்

சமூக சமத்துவத்திற்குரிய போராட்டம் என்பது எங்களின் அடிப்படை தத்துவங்களில் ஒன்று. கடந்தகாலங்களில் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வருகின்ற போதும் ஜேர்மன்ரீதியாக ஒப்பிட்டால் ஒபகவுசன் ஒரு வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்களின் இருப்பிடமாகவே உள்ளது. இந்த நகரத்தில் வசிக்கும் மக்களின் பொருளாதார ஏற்றத்தாழ்வு என்பது அதிகமாகவே காணப்படுகிறது. இதனாலேயே அனைவரையும் மேம்படுத்தும் சமூக பொருளாதார மேம்பாட்டு அரசியல் எங்கள் நகரத்திற்கு தேவைப்படுகிறது. அச்சம் மற்றும் பாகுபாடற்ற சமூக பாதுகாப்பு இருப்பது அனைவரையும் சமூகத்தில் ஒன்றாக இணைக்க உதவுகிறது. இதற்காகவே நாங்களும் துணைநிற்கின்றோம்.  நகர்புற தகுதி நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதன் மூலமும் பொது வேலைவாய்ப்பு துறையை நிறுவுவதன் மூலமும் புதிய நிலையான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதே எமது நோக்கம்.

3.அனைவருக்கும் பயன்தரும் சிறந்த போக்குவரத்து

நாம் எமது சமூக வாழ்வில் ஈடுபடுவதற்கு போக்குவரத்து  அத்தியவசியமானது. நாங்கள் அனைவரும் குறைந்தவு எரிபொருள்,பணம்,நேரம் இவற்றை பயன்படுத்தி வேண்டிய இடங்களுக்கு செல்வதையே விரும்புகிறோம். இதனால்  பாதசாரிகள் ,மகிழுந்து மற்றும் உள்ளூர் பொது போக்குவரத்தின் சுற்றுச்சூழல் வலையமைப்பை வலுப்படுத்தி எவரும் தங்கள் சொந்த வாகனங்களை சார்திருக்காத வகையில் நகரத்தை வடிவமைக்க விரும்புகிறோம். பொது போக்குவரத்து சேவையே எங்களுக்கு முதன்மை பெறுகிறது. பொதுபோக்குவரத்து சேவை என்பது பொதுநலனுக்கானதே. இதற்கான நிதியுதவிக்கு போராடுவதன் மூலம் பொது போக்குவரத்துசேவையை மேம்படுத்துவதோடு, மிதியுந்து மற்றும் நடைபாதைகளை விரிவாக்கம் செய்யமுடியும்.




4.குறைந்த வீட்டு வாடகைகள் எங்கள் உரிமை

பெரும்பான்மையான ஒபகவுசன் நகர மக்கள் வாடகை வீடுகளிலேயே வசிக்கிறார்கள். வருமானம் குறைந்தவர்கள் குறைந்த வாடகையில் வீடுகள் எடுப்பது என்பது இங்கு கடினமாகிக்கொண்டே போகிறது. அதனால் புதிய வீடுகள் கட்டி அவை மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வாடகைகளுக்கு கொடுப்பது உறுதிசெய்யப்படவேண்டும். இதை நடைமுறைப்படுத்த ஒரு பொதுவான கட்டுமான கூட்டுறவுச்சங்கம் உருவாக்கப்படவேண்டும். உயர்சாலை கட்டுமானங்கள் கூட மலிவு விலை வீடுகளுக்கு ஆபத்தை விளைவிக்கின்றன. குறிப்பாக ஓய்வூதியம் பெற்றவர்கள் மற்றும் குடும்பங்களும் தங்கள் சொந்த வீடுகளை இழக்கும் அபாயம் கூட ஏற்படுகிறது. அதனால்தான் கூடியளவு சாலைக்கட்டுமானங்களை  நிறுத்தவேண்டும் என்று கேட்கின்றோம்.

5.குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு சிறந்த வாய்ப்புகள்

எங்கள் குழந்தைகளும் இளைஞர்களும் சிறந்த வாய்ப்புக்களுக்கு தகுதியானவர்கள் என்பதால் முன்பள்ளி முதல் உயர்நிலை பாடசாலை வரை இலவசக்கல்வியையும் சிறந்த தினப்பராமரிப்புக்களையும் வழங்குவதை நாங்கள் ஊக்குவிக்கின்றோம். சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் , அவர்களின் பெற்றோர்களிடமுள்ள பணத்தை வைத்தோ அல்லது மதம் மற்றும் அவர்கள் வந்த நாட்டுப்பின்னனி அடிப்படையிலோ அல்லது மாற்றுத்திறனுள்ள காரணத்திற்காகவோ புறக்கணிக்கப்படக்கூடாது. மாறாக அனைவரும் சமவாய்ப்புக்களைப்பெறவேண்டும்.இதனால் அனைத்துக்குழந்தைகளுக்கும் போதுமான முன்பள்ளி வசதிகள் மற்றும் "அனைவருக்கும் பள்ளி" என்பதை ஏற்படுத்துவதோடு சகல மாணவர்களுக்கும் அனைத்து வாய்ப்புக்களையும் வழங்கும் பாடசாலை முறையை கட்டியெழுப்புவதும் எங்கள் நோக்கமாக உள்ளது.

6. வெளிநாட்டவருக்கு எதிரான எதிர்ப்பு, இனவெறி மற்றும் பாகுபாட்டை எதிர்ப்போம்.

தொழில்துறையின் குடியேற்ற நகரமாக ஒபகவுசனுக்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. குறிப்பாக அமைதியான வாழ்விற்கும் பன்முகத்தன்மை ஒருங்கிணைப்பிற்கும் ஏற்ற இடமாக ஒபகவுசன் அமைந்துள்ளது. அனைத்துவகையான பாகுபாடு,இனவெறி மற்றும் வலதுசாரிகளின் எதிப்பு என்பவற்றை நாங்கள் தொடர்ந்தும் எதிர்கிறோம். அதனால்தான் ஆண், பெண்அல்லது இருபாலும் கலந்தவர், வேற்று மதத்தவர், நாத்திகர், நோய்வாய்ப்பட்டவர், ஆரோக்கியமானவர்கள், இங்கு பிறந்தவர்கள் அல்லது தங்கள் நாட்டிலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் எவராக இருந்தாலும் சரி அனைவரும் சமூகத்தில் சேர்ந்து வாழ்வதற்காகவே நாங்கள் பாடுபடுகிறோம். திறந்த மனதுடன் அனைவரையும் வரவேற்கும் கலாச்சாரமே எங்களுடையது.

DIE LINKE.

LINKES ZENTRUM · Elsässer Straße 19 · 46045 Oberhausen · info@linkeliste-ob.de · 0208 / 88 42 20